

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



“
காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை
”

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9 788193 796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 55. புறநானூற்றில் சூழலியல்

**மு.சரண்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

உலக மொழிகளில் தனிப்பெரும் சிறப்பினைப் பெற்ற தமிழ் மொழியின் தனித்துவத்திற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. இச்சங்க இலக்கியப் பாடல்கள் இயற்கைக்கு பின்புலமாக அமைந்து காணப்படுகிறது. சங்ககாலப் புலவர்கள் இயற்கையை முழுமையாக உணர்ந்திருந்தனர் என்பதை அவர்தம் சங்கப் பாடல்கள் வாயிலாக அறியமுடிகிறது. சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றிப் பேணிப் பாதுகாத்ததோடு நில்லாமல் பேணும் முறையினை உலகிற்குக் கற்றுக்கொடுக்கும் பாங்கினையும் காணமுடிகிறது. பழந்தமிழர் வாழ்வில் இன்றியமையாக் கூறாக இயற்கை இருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக உணர்கின்றோம். இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடம் காண்கின்ற சுற்றுச் சுழல் பற்றிய சிந்தனைகள் பழந்தமிழரிடத்தும் இருந்துள்ளன என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. புறநானூற்றில் இடம்பெறக்கூடிய சூழல் மாசுபாடு, நீர் மாசுபாடு, காற்று மாசுபாடு போன்றவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சூழல் தூய்மை

மனிதன் தான் வாழும் இருப்பிடத்தையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாகப் பேணுகின்ற போது அதுவே ஆரோக்கியமான உலகிற்கு வழி வகுக்கிறது. அவ்வகையில் தம்மையும் தாம் வாழ்ந்த சூழலையும் அக்கறையுடன் பண்டைய மக்கள் பேணியமையைச் சங்க இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளால் அறியலாம். உடலைப் பேணிக்காக்கும் உணவுப் பழக்கத்தினை மேற்கொண்டு இருந்தனர்; அவ்வுணவைப் பாதுகாத்து உண்டனர் என்பதைச் சங்க அகஇலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் சைவ அசைவ உணவாகிய இரண்டையும் சேர்த்து உண்ணுவதே எல்லா விதமான சத்துப்பொருட்களும் உடலில் சேர்வதற்குரிய நல்வழி. உணவு முறையைச் சைவம் அசைவம் எனப் பிரிப்பது அறிவியல் அடிப்படையற்ற செயல் என்று அறிஞர் குறிப்பிடுவர். பழந்தமிழர் மேற்குறிப்பிட்டதை நன்குணர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். பழந்தமிழர் உணவில் சைவ அசைவ உணவுகள் இரண்டும் கலந்து இருந்துள்ளன. குறிப்பாக, உணவினை வேக வைத்து உண்ணும் வழக்கம் இருந்தமை அறிகின்றோம்.

"குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந் தளிர் கொய்துகொண்டு உப்பு இன்று
நீர் உலையாக ஏற்றி மோர் இன்று
அவிழ்ப் பதம் மறந்து பாசகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள்" (புறம்.159:9-13)

என்ற பாடலடிகளில் வேக வைக்கப்பட்ட கீரை உணவாக உட்கொள்ளப்பட்டமையை கூறப்படுகிறது. அக்கால மக்களின் தூய்மை பற்றிய விழிப்புணர்வாக இதனையும் கருத முடிகிறது.

## உணவுப் பாதுகாப்பு

தமிழர்கள் பருவ காலத்திற்கேற்ப உணவுப் பொருட்களைச் சேமிக்கும் பழக்கம் நிரம்பப் பெற்றிருந்தனர். சிறிய தாழ்வாரத்தினை உடைய குடிசையில் வாழும் குறவர்கள் வளைந்த மூங்கிலினுள் மதுவை வைத்து உண்ட செய்தியினை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

"குறி இறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கு அமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து"
(புறம்.129:1-2)

என்ற பாடலடிகளால் எடுத்தியம்புகிறார். இதுபோன்று அவ்வவ் நிலமக்கள் இத்தகைய உணவுப் பாதுகாப்பு முறையை அறிந்து இருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

தனிமனிதத் தூய்மை, மன அகத் தூய்மை மற்றும் மக்கள் ஒன்று கூடும் மன்றத் தூய்மை குறித்தும் பழந்தமிழரிடையே போதுமான விழிப்புணர்வு இருந்தமையைக் காண்கிறோம்.

### சூழல் மாசுபாடு

எப்பொருள் மாசுபாட்டிற்கு உட்படுகிறதோ அப்பொருள் மாசு எனப்படும். மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் தீமைவிளைவிக்கக் கூடிய நச்சுக்களைச் சுற்றுச்சூழல் மாசு எனப்படும்.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் தன்மையின் அடிப்படையில் மாசு பாட்டை ஒன்பது வகையாகப் பிரிப்பர். அம்மாசுபாடுகள் அனைத்தும் பழந்தமிழகத்தில் நிகழ்ந்ததுக்கு வாய்ப்பில்லை எனினும் சில மாசுபாடுகள் பற்றிய குறிப்புகள் நமக்கு கிடைக்கின்றன.

### காடுகள் அழிப்பு

பாரி பறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

"குறத்தி மாட்டிய வறல் கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின், அம் புகை அயலது
சாரல் வேங்கை பூஞ் சினைத் தவழும்"

(புறம்.108:1-3)

என்று வரும் பாடலடிகளால் சந்தன மரம் எரிக்கப் பட்டமையையும் அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிந்ததையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணரமுடிகிறது.

மற்றொரு புறப்பாடலில்,

"களிறே, எழுஉந் தாங்கிய கதவம் மலைத்து"
(புறம்.97:8)

என்ற வரியால் கோட்டைக்கு அமைந்த பெருங்கதவுகளின் வலிமையை உணர்த்தும் செய்தியினால் கதவுகள் செய்ய மரங்கள் அழிக்கப்பட்டமை பெறப்படுகிறது. இது போன்று தேர்கள், வண்டிகள், அச்சுகள் போன்ற பல பொருட்கள் செய்வதற்கும் மரங்களே பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

### நீர் மாசுபாடு

போர் காரணமாக எதிரி நாட்டு மன்னனின் நீர்நிலைகள் பாழ்படுத்தப்படுவது போர் நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

"ஒளிறு மருப்பின் களிறு அலர
காப்புடைய கயம் படியினை" (புறம்.15: 9-10)

என்றும்,

"களிறு படிந்து உண்டென, கலங்கிய துறையும்"
(புறம்.23:2)

என்று கூறப்படுவனவற்றால் எதிரிகளின் நீர்நிலைகள் யானைகள் கொண்டு மாசுபடுத்தப்பட்ட செய்தியை அறியலாம்.

### காற்று மாசுபாடு

காற்று மாசுபாடானது, வேண்டாத வாசனைகள் காற்றில் கலத்தல், வாயுக்களின் அளவு மாறுபடுமாறு குறிப்பிட்ட சில வாயுக்கள் மட்டும் அதிகரித்தல், அணுக்கள் மற்றும் தூசுக்கள் போன்றவை கலத்தல் என்னும் மூவகையினால் ஏற்படுகிறது. புகையினால் ஏற்படும் மாசினை,

"துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகில்ஆர் நறும்புகை ஐதுசென்று அடங்கிய
கபல நெடுநகர்" (புறம்.337:9-11)

என்னும் பாடலடிகளில், மக்கள் வாசனைக்காக அகில் கட்டைகளை எரித்து வீடுகளில் பரப்புவதும் தொடர்ச்சியான

இச்செயலால் வீடுகள் கரிபடிந்து காணப்படும் என்ற செய்தி கூறப்படுகிறது.

அகில் புகையின் அடர்த்தி அதிகமாகும் போது அப்புகை ஒரு மலையை மறைக்கும் அளவிற்கு கரும்புகையாகக் காட்சியளித்ததை, 'ஆடுமழைமங்குலின் மறைக்கும் நாடு' என்ற நற்றிணைப் பாடல் ஒன்று கூறுகிறது. பகை நாடுகளைத் தீயிட்டுக் கொளுத்தும் நிலையினைப் புறநானூற்று பாடல்கள் மிகுதியாக காணப்பட்டாலும் அதனைக் கண்டிக்கும் நிலையினையும் அண்டர் நடுங்கல்லினார் பாடலில் காண்கிறோம்.

"புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து
பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ" (புறம். 344:5)

என்ற பாடலடியில் புலவருக்கு இருந்த சூழலியல் குறித்த அக்கறையினைப் பதிவு செய்கிறது. இவ்வாறாக, இயற்கைச் சுழல்கள் மற்றும் மனிதர்களால் ஏற்பட்ட சூழல் மாசுபாடுகள் பற்றிய சிந்தனையைப் புறநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் சூழலியல் தொடர்பான சிந்தனைகள் காணப்படுகின்றன. உலக இயக்கம், ஞாயிறு மண்டலம் ஆகியன பற்றி அறிந்த வானவியல் சிந்தனையாளர்கள் இருந்தனர் என்பது இந்நூல் தரும் செய்தியாகும். சுற்றுப்புறச் சூழல் தூய்மை மற்றும் உணவு பாதுகாப்புமுறை குறித்த பார்வை பழந்தமிழர் இடையே இருந்தமையை கூறப்படுகிறது. போரினால் ஏற்படும் அழிவினைக் குறிப்பாகப் பகை மன்னர் நாடுகள், காவற்காடுகள் மற்றும் குளங்கள் மாசுபடுதலை விவரிக்கின்றது.